www.StudyGuideIndia.com

**5066**

Register Number

**Part III**

# பொருளியல் / ECONOMICS

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

*குறிப்பு :* **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். 50 × 1 = 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக : 14 × 1 = 14

1. கிடைப்பருமை இலக்கணத்தின் ஆசிரியர்

   அ) ஆடம் ஸ்மித் ஆ) சாமுவேல்சன்

   இ) ஆல்ஃபிரடு மார்ஷல் ஈ) இலயனல் ராபின்ஸ்.

2. பழமைப் பொருளாதாரம் என்பது

   அ) தற்சார்பு பொருளாதாரம் ஆ) சந்தைப் பொருளாதாரம்

   இ) கட்டளைப் பொருளாதாரம் ஈ) பணவியல் பொருளாதாரம்.

3. நுகர்வோர் எச்சம் என்பது

   அ) தகுவிலை – உண்மை விலை

   ஆ) $MU_n = TU_n - TU_{n-1}$

   இ) தேவை = அளிப்பு

   ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

[ Turn over

www.StudyGuideIndia.com

4. பண்டத்திற்கான தேவை இதனைச் சார்ந்தது

அ) பண்டத்தின் விலை

ஆ) சார்ந்த பண்டங்களின் விலை

இ) வருமானம்

ஈ) இவை அனைத்தும்.

5. விலையில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப தேவையின் மாற்றத்தை தோற்றுவிக்கும் அளவு

அ) வருமான தேவை நெகிழ்ச்சி

ஆ) குறுக்கு தேவை நெகிழ்ச்சி

இ) விலைத்தேவை நெகிழ்ச்சி

ஈ) இவை அனைத்தும்.

6. சமநிலை விலையில் காலத்தின் பங்கை அறிமுகப்படுத்தியவர்

அ) J. R. ஹிக்ஸ்

ஆ) J. M. கீன்ஸ்

இ) ஆல்பிரட் மார்ஷல்

ஈ) J. S. மில்.

7. உற்பத்தி என்பது

அ) பயன்பாட்டின் அழிவு

ஆ) பயன்பாட்டை உருவாக்குதல்

இ) மாற்று மதிப்பு

ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

8. சராசரி செலவு இதனால் வகுக்கும்போது கிடைக்கும்

அ) TC/q

ஆ) TFC/q

இ) TVC/q

ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

www.StudyGuideIndia.com

9. நிறைவுப் போட்டியில் தேவைக்கோடு இவ்வாறு இருக்கும்

அ) மேல்நோக்கி சரிந்து செல்லும் ஆ) கிடைமட்டமாக இருக்கும்

இ) கீழ்நோக்கி சரிந்து செல்லும் ஈ) செங்குத்தாக இருக்கும்.

10. இலாபம் இதற்கான வெகுமதி

அ) நிலம் ஆ) மூலதனம்

இ) உழைப்பு ஈ) அமைப்பு.

11. பேரியல் பொருளாதாரத்தின் மையப் பிரச்சினை

அ) வருமானமும் வேலை வாய்ப்பும் ஆ) விலையும் வெளியீடும்

இ) வட்டியும் பணமும் ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

12. வருமான நிர்ணயம் பற்றிய எளிய கோட்பாட்டை விளக்க கீன்சு .................... பயன்படுத்தினார்.

அ) நுகர்வையும், முதலீட்டையும்

ஆ) ஒட்டுமொத்த தேவையையும், ஒட்டுமொத்த அளிப்பையும்

இ) உற்பத்தியையும், செலவையும்

ஈ) இவை அனைத்தும்.

13. பணவீக்கத்தின் போது என்ன நிகழும்

அ) வியாபாரிகள் இலாபம் ஈட்டுவர்

ஆ) ஊதியம் ஈட்டுபவர் இலாபம் பெறுவர்

இ) மாத சம்பளம் பெறுபவர் இலாபம் பெறுவர்

ஈ) வாடகைக்கு விடுபவர் இலாபம் பெறுவர்.

14. அரசினால் விதிக்கப்படும் கட்டாய கட்டணம் என்பது

அ) அனுமதி ஆ) வெகுமதி மற்றும் மானியம்

இ) கடன் ஈ) வரி.

[ Turn over

www.StudyGuideIndia.com

II. கோடிட்ட இடங்களை நிரப்புக : 12 × 1 = 12

15. நுண்ணியல் என்பது ........................ ஆகும்.

16. முதலாளித்துவத்தில் பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகளும் ........................ ஐ மையமாகக் கொண்டே செயல்படுகிறது.

17. இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்ஜியமாகும்போது மொத்த பயன்பாடு ........................ ஆகும்.

18. தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர் ........................ .

19. அங்காடிக்காலத்தில் அளிப்புக்கோடு ........................ இருக்கும்.

20. நிலமும், உழைப்பும் ........................ உற்பத்திக் காரணிகள் ஆகும்.

21. பணச் செலவினை ........................ என்றும் அழைக்கலாம்.

22. பொருளை வடிவமைக்கும் உரிமையின் மூலம் அடையப்படும் முற்றுரிமை ........................ என்றழைக்கப்படும்.

23. பணக்கூலி என்பது ........................ கூலி என்றும் அழைக்கலாம்.

24. ........................ என்பது வருமான மாற்றத்தினால் சேமிப்பில் ஏற்படும் மாற்ற விகிதத்தைக் குறிக்கும்.

25. பரிமாற்றச்சமன்பாடு ( $MV = PT$ ) என்பதை அளித்தவர் ........................ .

26. ........................ என்பது பல்வேறு வழிகளில் அரசுக்கு வரும் வருவாய்.

www.StudyGuideIndia.com

III. கீழ்வருவனவற்றைப் பொருத்துக : $12 \times 1 = 12$

| | |
|---|---|
| 27. செல்வம் | அ) பணத்தின் வாங்கும் சக்தி |
| 28. வாய்ப்புச் செலவு | ஆ) தங்கம் மற்றும் வெள்ளி |
| 29. சமநோக்கு வளைக்கோடு | இ) $TC_n - TC_{n-1}$ |
| 30. விலை, தேவை நேரடியான உறவு | ஈ) $C + I + G + (X - M)$ |
| 31. சமநிலை | உ) சாதாரண தரம் |
| 32. வேலைப்பகுப்பு முறை | ஊ) சிறந்த வரி முறை |
| 33. $MC_n$ | எ) இருப்பு |
| 34. உலக அங்காடி | ஏ) வெப்ளன் விளைவு |
| 35. இடர் தாங்கும் இலாபக் கோட்பாடு | ஐ) விலை மற்றும் அளவின் இணை |
| 36. ஒட்டுமொத்த தேவை | ஒ) ஆடம் ஸ்மித் |
| 37. பணத்தின் மதிப்பு | ஓ) ஹாலே |
| 38. வளர்வீத வரி | ஔ) அடுத்த சிறந்த மாறுபட்ட பண்டத்தை கொடுத்தல். |

[ Turn over

www.StudyGuideIndia.com

IV. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக: 12 × 1 = 12

39. இலவச பண்டங்களுக்கு ஓரிரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

40. அளவுக்கதிகமான உற்பத்தியின் விளைவு யாது ?

41. சம இறுதிநிலைப் பயன்பாட்டிற்கு வேறு பெயர் என்ன ?

42. விலை தேவை நெகிழ்ச்சியை அளவிடும் புள்ளி முறையின் வாய்ப்பாடு என்ன ?

43. அங்காடிக் காலத்தில் அளிப்பு நிலையானதா ?

44. காப்-டக்லஸ் உற்பத்தி சார்பினைக் கூறு.

45. உறை வடிவ வளைகோடு என்பது என்ன ?

46. 'முற்றுரிமை' என்பது எதைக் குறிக்கும் ?

47. சும்பீட்டரின் இலாபக் கோட்பாட்டின் பெயர் என்ன ?

48. ஒட்டுமொத்த தேவையும், ஒட்டுமொத்த அளிப்பும் சந்திக்கும் புள்ளியின் பெயர் என்ன ?

49. மிகைவேக பணவீக்கத்தினை சந்தித்த ஒரு நாடு எது ?

50. VAT என்பதன் விரிவாக்கம் யாது ?

## பகுதி - ஆ

V. *குறிப்புகள் :* i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் *நான்கு* அல்லது *ஐந்து* வரிகளில் அமைந்திட வேண்டும். 10 × 3 = 30

51. இலவச பண்டங்கள் மற்றும் பொருளாதாரப் பண்டங்களை வேறுபடுத்துக.

52. எந்த ஒரு சமுதாயத்திலும் காணப்படும் அடிப்படை பிரச்சனைகள் யாவை ?

53. வாய்ப்புச் செலவு என்றால் என்ன ?

54. சமநோக்கு வளைக்கோட்டின் பண்புகள் யாவை ?

55. தேவை நெகிழ்ச்சியின் வகைகள் யாவை ?

56. சமநிலை விலை என்றால் என்ன ?

57. அளிப்புக்கோடு இடம் பெயர்தலை தீர்மானிக்கும் காரணிகள் யாவை ?

www.StudyGuideIndia.com

58. உழைப்பு என்றால் என்ன ?

59. உற்பத்தி சார்பு என்றால் என்ன ? ஒரு எடுத்துக்காட்டு தருக.

60. குறுகிய மற்றும் நீண்ட காலத்திற்கு உள்ள வேறுபாடு யாது ?

61. 'இறுதிநிலைச் செலவு' - வரையறுக்கவும்.

62. நீர்மை விருப்பக் கோட்பாட்டின் மூன்று நோக்கங்கள் யாவை ?

63. சேயின் அங்காடி விதியின் எடுகோள்கள் யாவை ?

64. பணக்கொள்கையின் இலக்கணம் கூறுக.

65. ஆதம் ஸ்மித்தின் புனிதவரி விதிப்புக் கொள்கைகள் யாவை ?

## பகுதி - இ

VI. *குறிப்புகள் :* i) எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் ஒரு பக்க அளவில் அமைந்திட வேண்டும்.

$6 \times 10 = 60$

66. கலப்புப் பொருளாதாரத்தின் நன்மை தீமைகள் யாவை ?

67. குறுகிய காலத்தில், தேவைக்கோடும் அளிப்புக் கோடும் எவ்வாறு விலையைத் தீர்மானிக்கிறது என்பதை வரைபடத்துடன் விளக்குக.

68. தொழில்முனைவோரின் பணிகள் யாவை ?

69. AR மற்றும் MR கோடுகளுக்கிடையே உள்ள தொடர்புகளை விளக்குக.

70. SAC மற்றும் SMC-க்கும் உள்ள உறவினை விளக்குக.

71. முற்றுரிமையைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் யாவை ?

72. நுகர்வுச் சார்பை வரைபடத்துடன் விளக்குக.

73. நுகர்வைத் தீர்மானிக்கும் வருமானம் தவிர பிற காரணிகள் யாவை ?

74. மாநில அரசின் முக்கிய வரி வருவாய் மற்றும் வரியற்ற வருவாய் எவை ? எவை ?

75. நேர்முக வரி மற்றும் மறைமுக வரியை வேறுபடுத்திக் காட்டுக.



www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

VII. *குறிப்புகள் :* i) எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் *மூன்று பக்க* அளவில் அமைந்திட வேண்டும்.

$3 \times 20 = 60$

76. பொருளாதாரத்தைப் பற்றிய இலயனல் ராபின்சின் இலக்கணத்தை ஆராய்க.

77. குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியின் படம் வரைந்து விளக்கம் தருக.

78. தேவை விதியியை விளக்குக.

79. குறுகிய காலத்தில் நிறைவுப் போட்டியில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன என்பதை விவரிக்கவும்.

80. இறுதிநிலை உற்பத்திதிறன் பகிர்வுக் கோட்பாட்டினை விவரிக்கவும்.

81. பணவீக்கத்தின் காரணங்கள் விளைவுகள் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளை விளக்கவும்.

www.StudyGuideIndia.com